**இனிமையான குழந்தைகளே! முழு கல்பத்திலும் உயர்ந்ததிலும் உயர்ந்த (சிவபாபாவின்) ரதம் (மனித சரீரம் உடையவர்) இந்த பிரம்மா ஆவார், இவருக்குள் தான் தந்தை பிரவேசம் செய்கிறார், இவரைத்தான் நீங்கள் பின்பற்ற வேண்டும்.**

கேள்வி: தந்தை மற்றும் தாதா (பிரம்மா பாபா) இருவரின் விசேஷ குணங்கள் என்ன, அதனை நீங்களும் பின்பற்ற வேண்டும்?

பதில்: தந்தை நிராகாரமாகவும் அகங்காரமற்றவராகவும் இருக்கிறார், அதுபோல் தாதாவும் சாகாரத்தில் இருந்ததாலும் எப்போதும் அகங்காரமற்றவராக இருந்தார். இவ்வளவு உயர்ந்த மதிப்பிற்குரியவராக இருப்பினும் எவ்வளவு சாதாரணமாக இருக்கிறார். ஒரு புறம் சொல்கிறார் - இவர் உயர்ந்தவரிலும் உயர்ந்தவர், வைரமாக ஆக்கக் கூடிய பாபாவின் பெட்டகம்; மறுபுறம் சொல்கிறார் - இவர் பழையதிலும் பழைய (லாங் பூட்) காலணி யாக இருக்கிறார், இவருக்குள் தந்தை பிரவேசமாகியிருக்கிறார். இருவருமே குழந்தைகளின் சேவையில் ஆஜராகியிருக் கின்றனர். ஆக அதுபோலவே குழந்தைகளும் தந்தையைப் பின்பற்றி அகங்காரமற்றவராகி சேவை செய்ய வேண்டும்.

பாடல்: ஓம் நம: சிவாய. . .

ஓம் சாந்தி. குழந்தைகள் யாருடைய மகிமையைக் கேட்டீர்கள்? உயர்ந்தவரிலும் உயர்ந்தவர் பகவான், அவரது பெயர் சிவன் என அனைத்து குழந்தைகளும் சொல்வார்கள். சிவாய நமஹ என சொல்கின்றனர் அல்லவா, இதனை பாரதவாசிகள் அறிவார்கள், சிவ ஜெயந்தியும் கொண்டாடு கின்றனர். நீயே தாயும் தந்தையும். இப்படி நிறைய மகிமை செய்கின்றனர். ஆனால் சிவாய நமஹ என மட்டுமே சொல்கின்றனர், ஆனால் அவர் எப்படி தாயாக தந்தையாக ஆகிறார், எப்படி ஆஸ்தி கொடுக்கிறார் - இது முழு உலகிலும் யாருக்கும் தெரியாது. இவர் ஒரு அதிசயமான உடலை உடையவரான ரதமாவார். சிவபாபா நிராகாரமானவர். சிவபாபாவுக்கு எதுவரை சரீரம் கிடைக்க வில்லையோ அதுவரை அவர் என்ன செய்வார்? சிவபாபா நிராகாரமானவர். நிராகாரரின் மகிமை பாடுகின்றனர். அனைத்திலும் உயர்ந்ததிலும் உயர்ந்த இடம் அவருடையதாகும். எந்த இடம்? மூல வதனம். பிறகு பிரம்மா, விஷ்ணு, சங்கரரின் இடம் எது? சூட்சும வதனம். பிறகு ஜகதம்பாவின் இடம் - இந்த ஸ்தூல வதனம். ஜகதம்பா இங்கே வசிப்பவராக இருப்பார் என அனைவரும் அறிவார் கள். ஜகத் என்றாலே மனித சிருஷ்டி. பெயர் என்னவோ மிகவும் நன்றாக உள்ளது - ஜகத் அம்பா, ஆனால் அவர் யார்? எங்கிருந்து வந்தார்? இதுபற்றி கொஞ்சம் கூட தெரியாது. அறிமுகம் எங்கிருந்து கிடைத்தது? கண்டிப்பாக யாரோ உடலைக் கொண்ட ஒரு மனிதரிடமிருந்து கிடைக்க வேண்டும், அவருக்குள் பரமபிதா பாரமாத்மா வரவேண்டும். நிராகார ஆத்மாக்களும் கூட மனித சரீரத்தில் வருகின்றன. ஆத்மா விலங்குகளுக்குள்ளும் இருக்கலாம், ஆனால் அவைகளின் பெருமை எதுவும் இல்லை. பெருமை எந்த உடலுக்குரியவருக்கு ஏற்படுகிறது? நிராகார சிவபாபா வுக்கு. அவர் ஒரு முதியவரின் உடலுக்குள் வராதவரை எதுவும் செய்ய முடியாது. ஆத்மாவுக்கும் கூட எதுவரை சரீரம் கிடைப்பதில்லையோ அதுவரை நடிப்பை நடிக்க முடியாது.

உடலுக்கு (ரதத்திற்கு) பெருமை இல்லை. அவருடைய உடலுக்குள்ளே ஆத்மா வரும்போதுதான் அவருக்கு பெருமை ஏற்படுகிறது. என்னுடைய மகிமையை பதித பாவனர் (தூய்மையற்றவரை தூய்மை யாக்குபவர்) என பாடுகின்றனர், ஆனால் எனக்கும் கூட மனித உடல் தேவைப்படுகிறது, அதில் நான் பிரவேசம் செய்கிறேன். உடலின்றி எதுவும் செய்ய முடியாது. ஆக தந்தையும் வந்து உடலை எடுக்கிறார். அவர் கர்ப்பத்தில் வருவதில்லை. சிவஜெயந்தியும் பாடப்படுகிறது, ஆனால் சிவபாபா எந்த உடலில் மற்றும் எப்போது வந்தார் என்பது அவர்களுக்குத் தெரியாது. நல்லது, இரவில் வந்தார், ஆனால் எந்த உடலில் வந்தார், இது தெரியாது. பாகீரதி அதாவது பாக்கியசாலி ரதம் என பாடவும் செய்கின்றனர் எனும்போது கண்டிப்பாக மனிதரின் உடலாக இருக்கும். இந்த உடல், பரமபிதா பரமாத்மா பிரவேசம் செய்யக்கூடிய உடல் எவ்வளவு உயர்வானது (மதிப்பு வாய்ந்தது). சிவபாபா பிரம்மாவைத் தவிர வேறு எந்த உடலிலும் வரமுடியாது என இப்போது நீங்கள் அறிவீர்கள். பரமபிதா பரமாத்மா பிரம்மாவின் மூலம் தான் வந்து மனித சிருஷ்டியை படைக்கிறார், எப்போதெல்லாம் பாரதம் மிகவும் துக்கம் நிறைந்ததாகவும், கீழானதாகவும் (பிரஷ்டாச்சாரியாக) ஆகி விடுகிறதோ அப்போது பரமபிதா பரமாத்மா இந்த உடலில் பிரவேசம் செய்து சுகம் நிறைந்ததாகவும், உயர்வானதாகவும் (சிரேஷ்டாச்சாரியாகவும்) ஆக்குகிறார். இந்த பாகீரதம் இல்லாமல் சிவபாபா எதுவும் செய்ய முடியாது. யாராவது வேண்டும் அல்லவா. இந்த உடல் சிவபாபாவுடையதாகும். இவர் இல்லா விட்டால் நீங்கள் சிவபாபாவிடமிருந்து ஆஸ்தியை பெற முடியாது. பிரஜாபிதா பிரம்மா அல்லது திரிமூர்த்தி பிரம்மா என பாடவும் படுகிறது. தேவ தேவ மகாதேவ் என சொல்கின்றனர். இந்த மூவரிலும் கூட பிரம்மாவின் பெயர் ஏன் உயர்வாக இருக்கிறது? பிரம்மா இங்கேதான் இருக்கிறார், அவருடைய ரதத்தில் வருகிறார். விஷ்ணு மற்றும் சங்கரரை தேவதைகள் என சொல்கின்றனர். நல்லது, பிரம்மா இருக்கிறார், அவரை தேவதை என சொல்ல வேண்டுமா? அவர் பிரஜாபிதா பிரம்மா ஆவார். சிவபாபாவிற்கு மனித உடல் தேவைப் படுகிறது. பிரஜாபிதா பிரம்மாவின் மூலம் சிருஷ்டியை படைக்கிறார் என பாடவும் பட்டுள்ளது. ஆக பிரம்மாவின் வாய் வழி மூலமே பிராமணர்களைப் படைப்பார். ஆக இவர் எவ்வளவு மதிப்புள்ள உடலை உடையவர், ஆனால் எவ்வளவு சாதாரணமாக இருக்கிறார். இவ்வளவு உயர்ந்தவர், அவர் இருப்பது (நடைமுறை யில்) எவ்வளவு சாதாரணமாக உள்ளது பாருங்கள். எவ்வளவு அகங்கார மற்றவராக இருக்கிறார். இப்போது வந்து உங்களுடைய சேவையில் இருக்கிறார். எப்படி அமர்ந்து கற்பிக்கிறார் பாருங்கள். நீங்கள் என்ன கற்கிறீர்கள்? நாங்கள் இராஜயோகத்தின் படிப்பை கற்கிறோம் என நீங்கள் சொல்வீர்கள். யார் கற்பிக்கிறார்? பரமபிதா பரமாத்மா. ஆக, சிறியவர்கள், பெரியவர்கள், முதியவர்கள், இளைஞர்கள் என அனைவருமே படிக்கின்றனர். இது மனிதரி லிருந்து தேவதையாக அல்லது உலகின் அதிபதியாக ஆவதற்கான ஈஸ்வரிய கல்லூரியாகும். இங்கே நாம் வந்ததே கற்றுக் கெள்வதற்காக அல்லது உலகின் இராஜ்யத்தை எடுப்பதற்காக. லட்சுமி நாராயணர் உலகின் மீது இராஜ்யம் செய்து வந்தபோது வேறு தர்மம் இருக்கவில்லை. வேறு கண்டமும் இருக்கவில்லை. ஒரு பாரத கண்டம் தான் இருந்தது. இப்போது மீண்டும் அந்த பதவியை பெறுவதற்காக நீங்கள் இங்கே எப்படி அமர்ந்திருக்கிறீர்கள்! இந்த படிப்பு இல்லாமல் நீங்கள் உலகத்தின் எஜமானாக ஆக முடியாது; பாரதம் சிவாலயமாக ஆக முடியாது. நிராகாரி, நிரகங்காரி என சிவபாபாதான் பாடப்படுகிறார். சரீரத்தில் பிரவேசமாகாமல்

எப்படி அகங்காரமற்ற தன்மையை வெளிப்படுத்துவது? எவ்வளவு மகிமை உள்ளது - அகால மூர்த்தி. . . ஆனால் அவர் பிணத்தை உயிர்ப்பிக்கக் கூடியவர் என்பது அதன் அர்த்தம் அல்ல. நமக்கு பரமபிதா பரமாத்மா கற்பிக்கிறார் என குழந்தைகளாகிய உங்களுக்கு மிகவும் போதை இருக்க வேண்டும். பிரஜாபிதா பிரம்மாவின் மூலம் இராஜயோகம் கற்பித்துக் கொண்டிருக்கிறார். பிரம்மாவைத் தவிர பிரஜாபிதா என யாரையும் சொல்ல முடியாது. சிவன் அல்லது விஷ்ணுதான் பிரஜாபிதா என்பது அல்ல. இல்லை. பிரம்மாதான் முழு மனித சிருஷ்டியின் தந்தை ஆவார் மற்றும் ஆத்மாக்களின் தந்தை சிவபாபா ஆவார். மற்றபடி அந்த தந்தையை யாருக்கும் தெரியவே தெரியாது. தம்முடைய ஆத்மாவைப் பற்றியே தெரியாது. புண்ணிய ஆத்மா, பாவாத்மா என சொல்கின்றனர், பிறகு நாங்கள்தான் பரமாத்மா என ஏன் சொல்கின்றனர்? எவ்வளவு ஏமாற்று வேலை. இன்றிலிருந்து 5 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் அமைதி, தூய்மை, செல்வ வளம் இருந்தது என குழந்தை களாகிய நீங்கள் அறிவீர்கள். நான் வந்து அனைவருக்கும் ஞானம் கொடுக்கிறேன், முதலில் நீங்கள் எதுவும் தெரிந்திருக்கவில்லை, இப்போது அனைத்தும் தெரிந்திருக்கிறீர்கள் என இப்போது தந்தை சொல்கிறார். தந்தையின் வரலாற்றை தந்தையிடமிருந்தே தெரிந்துக் கொள்ளப்படுகிறது. இப்போது நிராகாரமானவருக்கு வரலாறு எப்படி இருக்க முடியும்? கண்டிப்பாக சாகாரத்தில் வரும்போது வரலாறு ஏற்படும். ஆத்மாவுக்கு மட்டும் வரலாறு இருக்க முடியாது. ஜீவாத்மாவாக இருந்தால் மறுபிறவிகள் ஏற்படும், அப்போது வரலாறும் கூட ஏற்படும். 84 லட்சம் உயிரினங்கள் இருக்கின்றன என அந்த மனிதர்கள் சொல்கின்றனர். 84 லட்சம் பிறவிகள் ஏற்படுவதில்லை என தந்தை சொல்கிறார். இவையனைத்தும் கட்டுக் கதைகள் ஆகும். நான் பிரம்மாவின் உடலில் வந்து உங்களுக்கு வேதங்களின் சாரத்தைப் புரிய வைக்கிறேன் என தந்தை சொல்கிறார். கூடவே இராஜயோகத்தைக் கற்பிக்கிறேன் மேலும் படைப்பவர் மற்றும் படைப்பின் முதல் இடை கடைசியின் ரகசியத்தையும் புரிய வைக்கிறேன். முதன் முதலில் பெரிய பெரிய ரிஷி முனி முதலானவர்கள் கூட அறிந்திருக்கவில்லை எனும்போது அவர்களின் வாரிசுகள் எப்படி தெரிந்திருக்க முடியும். ஆக, மதிப்புள்ள உடலைக் கொண்டவர் (பிரம்மா) எவ்வளவு சாதாரணமான ரூபத்தில் இருக்கிறார், பாருங்கள். உயர்ந்ததிலும் உயர்ந்த வைரமாக ஆக்குபவர் தந்தை ஆவார். இவர் அவருடைய பெட்டியாக இருக்கிறார். ரதம் என சொல்லுங்கள், பழைய செருப்பு என சொல்லுங்கள், அனைத்திலும் பழைய செருப்பு இவர் ஆவார். முதன் முதலில் ஆத்மா வருகிறது எனும்போது முதல் நம்பராக இருந்தது, ஸ்ரீ நாராயணரை முதல் நம்பரில் வைப்போம். ஸ்ரீ லட்சுமியும் கூடுதலாக இருக்கிறார். அவரும் கூட மறுபிறவி எடுத்தார். முதலில் சூரிய வம்சத்தவர், பிறகு சந்திரவம்சத்தில். . . இப்படியாக பிறவிகள் எடுத்தபடி வந்தால் 84 பிறவிகளின் கணக்கும் தேவை அல்லவா. 84 லட்சத்தின் கணக்கை யாரும் சொல்ல முடியாது. 84 லட்சம் பிறவி களின் காரணமாக பிறகு கல்பத்தின் ஆயுளையும் இலட்சக்கணக்கான வருடங்கள் என எழுதி விட்டனர். இலட்சக்கணக்கான வருடங்கள் என்றால் பாரதவாசி இந்துக்கள் நிறைய பேர் இருப்பார் கள். ஆனால் இந்த எண்ணிக்கை இன்னும் குறைவே ஆகும். பாரதத்தின் தேவி தேவதைகளின் தர்மம் மறைந்து விட்டுள்ளது. யாரும் தம்மை தேவதைகள் என சொல்ல முடியாது, ஏனென்றால் தேவதைகள் அனைத்து குணங்களும் நிறைந்தவர்களாக இருந்தவர்கள். இப்போது அவர்கள் இல்லை. இராவண இராஜ்யம் உள்ளது இராம இராஜ்யம்

அல்ல. உலகினருக்கு இராவணனுடைய வரலாறும் தெரியாது, இராமனுடைய வரலாறும் தெரியாது. நாளுக்கு நாள் இராவணனுடைய கூட்டம் அதிகரித்தபடி செல்கிறது. உலகம் தூய்மையற்றதாக ஆகிக் கொண்டிருக்கிறது. 16 கலையிலிருந்து குறைந்து இப்போது கலையே இல்லை என ஆகிவிட்டது. அனைவருமே குணமற்ற எனக்குள் எந்த குணமும் இல்லை என சொல்கின்றனர். நீங்கள் தான் கருணை காட்ட வேண்டும். அப்போது நாங்கள் அனைத்து குணங்களிலும் நிறைந்த, 16 கலைகளும் நிரம்பியவர் ஆகி விடுவோம். பாரதம் முதலில் பரிஸ்தானமாக (தேவதைகளின் உலகமாக) இருந்தது. பேச்சளவில் மட்டும் சொல்கின்றனர். ஆனால் சிருஷ்டி சக்கரத்தைப் பற்றி கொஞ்சமும் தெரியாது. உங்களை மாயை துச்ச (கீழான) புத்தியுள்ளவர்களாக ஆக்கிவிட்டது என தந்தை சொல்கிறார். ஆனால் தான் என்ற கர்வம் எவ்வளவு இருக்கிறது.

இனிமையான குழந்தைகளே, நீங்கள் இராமனை நினைவு செய்தீர்கள் என்றால் மாலையில் கோர்க்கப்பட தகுதியுடையவர்களாவீர்கள் என குழந்தைகளாகிய உங்களுக்கு தந்தை சொல்கிறார். ருத்ர மாலைக்குப் பிறகு விஷ்ணு மாலை உண்டாகிறது. பக்த மாலையில் பக்தர்களின் மகிமை இருக்கிறது. இந்த ருத்ர மாலை அல்லது விஷ்ணு மாலையில் கோர்க்கப்படுவது என்றால் விஷ்ணுவின் இராஜ்யத்தில் வருவதாகும். எவ்வளவு உயர்ந்த ஞானமாக உள்ளது. சன்னியாசம் கூட இரண்டு விதமானது. அது ஹடயோகத்தின் சன்னியாசமாகும். கர்ம சன்னியாசம் ஒருபோதும் ஏற்பட முடியாது. கர்மம் செய்யாமல் மனிதர்கள் இருக்க முடியாது. பிராணாயாமம் செய்தபடி அமர்ந்து விட்டாலும் அதனை கர்மம் என்றே சொல்வோம் அல்லவா. பல விதமான பயிற்சிகள் செய்கின்றனர். அது இராஜயோகம் அல்ல. அது எல்லைக்குட்பட்ட சன்னியாசம், ஹடயோக சன்னியாசமாகும். அதுவும் கூட பாரதத்தின் தூய்மையின் தர்மம் ஆகும். ஆனால் தேவி தேவதை களின் அளவு தூய்மையாக வேறு எந்த தர்மமும் இருக்க முடியாது. அங்கே யாரும் சன்னியாசம் செய்ய வேண்டியிருக்காது, ஏனென்றால் ஆத்மா தூய்மையாக இருக்கும்போது அவர்களுக்கு சரீரமும் தூய்மையானதாக கிடைக்கும். ஆத்மாவில்தான் துரு படிகிறது. கலை குறைந்து குறைந்து தூய்மையற்றவர்களாக ஆகி விடுகின்றனர். இப்போது அனைத்து ஆத்மாக்களும் இரும்பு யுகத்தில் இருக்கின்றனர். அனைவரும் கருப்பாக இருக்கின்றனர். ஆத்மா தூய்மையாக இருந்தபோது வெள்ளையாக இருந்தது. இப்போது ஆத்மா தூய்மையற்றதாக இருக்கும்போது, சரீரமும் கூட தூய்மையற்றதாக கருப்பாக இருக்கிறது. சியாம் - சுந்தர் என பாடவும் படுகிறது. கிருஷ்ணரின் உருவத்தையும் கூட கருப்பாகவும் வெள்ளையாகவும் உருவாக்கு கின்றனர். இப்பொழுது நீங்கள் அனைவரும் ஷியாம்-சுந்தராக உள்ளீர்கள், ஆரம்பத்தில் பாரதம் தங்கயுகமாக இருந்தது, இப்பொழுது இரும்பு யுகமாக உள்ளது, இப்பொழுது தந்தை ஞான சிதையில் அமர வைத்து தூய்மையாக்குகிறார், முக்தி, ஜீவன்முக்தி வேண்டும் என்றால் அந்த விகாரத்தின் தாலிக் கயிற்றை ரத்து செய்ய வேண்டும். தூய்மையின் ராக்கியை கட்டுங்கள். இது இப்போதைய விஷயமாகும், இந்த சமயத்தில் நீங்கள் பிரம்மாவின் குழந்தைகளாக இருக்கிறீர்கள். பிராமணர்கள் ஆகாமல் யாரும் இங்கே வர முடியாது. நீங்கள் பிரம்மாவின் வாய்வழி வம்சாவளியினர். நிராகாரமான என் மகிமையை பாடுகின்றனர், ஆனால் சரீரம் எடுக்காதவரை என்ன தான் செய்ய முடியும்? என சிவபாபா சொல்கிறார். நான் பிரம்மாவின் பல

பிறவிகளின் கடைசி பிறவியில் வருகிறேன். இப்போது அனைத்தும் வினாசம் ஆகவுள்ளது. பிரம்மாவின் மூலம் ஸ்தாபனை, எதனுடைய ஸ்தாபனை? கலியுகத்தின் ஸ்தாபனை ஒருபோதும் ஆவதில்லை. சங்கமயுகத்தில் சத்யுகத்தின் ஸ்தாபனை ஏற்படுகிறது. நான் சங்கமயுகத்தில் வருகிறேன் என தந்தை சொல்கிறார். பிராமணர்களாகிய உங்களுக்கு இது சங்கமயுகம், மற்றவர்களுக்கு இது கலியுகம். இந்த சமயத்தில் அனைவரும் அடர்ந்த காரிருளில் இருக்கின்றனர். ஆக, அடர்ந்த காரிருளைத்தான் தந்தை வந்து அதிக பிரகாசமாக ஆக்குகிறார். இது விசித்திரமான விஷயம் என குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். கிருஷ்ணரோ சிறு குழந்தை ஆவார், அவர் எதுவும் புரிய வைக்க முடியாது. கிருஷ்ணருடைய ஆத்மாவும் தனது இறுதிப் பிறவியில் வேறு பெயர் உருவத்தில் இவரிடமிருந்து புரிந்து கொண்டபடி இருக்கிறது, ஆகையால் இவரை சியாம் சுந்தர் எனவும் சொல்கின்றனர். நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. பாப்தாதாவுக்குச் சமமாக (அசரீரி) நிராகாரியாகவும் அகங்காரமற்றவராகவும் ஆக வேண்டும். அனைவருக்கும் சேவை செய்ய வேண்டும்.

2. முக்தி ஜீவன் முக்திக்காக தூய்மையின் ராக்கியை அணிய வேண்டும். ஞானச் சிதையில் அமர வேண்டும்.

வரதானம்: பவர்ஃபுல் பிரேக் மூலமாக ஒரு நொடியில் ஸ்தூல (வ்யக்த்) உணர்விற்கு அப்பாற்பட்டு இருக்கக் கூடிய அவ்யக்த ஃபரிஷ்தா மற்றும் அசரீரி ஆவீர்களாக.

நாலா புறங்களிலும் சப்தத்தின் வாயுமண்டலம் இருந்தாலும் சரி, ஆனால் நீங்கள் ஒரு நொடியில் ஃபுல்ஸ்டாப் - முற்றுப் புள்ளி வைத்து வ்யக்த - ஸ்தூல உணர்விற்கு அப்பாற்பட்டவராக ஆகி விடுங்கள். முற்றிலுமாக பிரேக் போடப்பட்டு விட வேண்டும். அப்பொழுது தான் அவ்யக்த ஃபரிஷ்தா அல்லது அசரீரி என்று கூறுவார்கள். இப்பொழுது இந்த பயிற்சியின் மிகுந்த அவசியம் உள்ளது. ஏனெனில் இயற்கையின் ஆபத்துக்கள் திடீரென்று ஏற்படப் போகிறது. அந்த நேரத்தில் புத்தி வேறு எங்குமே செல்லக் கூடாது. தந்தை மற்றும் நான் அவ்வளவே. புத்தியை எங்கு ஈடுபடுத்த விரும்புகிறீர்களோ, அங்கு ஈடுபட்டு விட வேண்டும். இதற்காக உள்ளடக்கம் மற்றும் ஒருமுகப்படுத்தும் சக்தி தேவை. அப்பொழுது தான் பறக்கும் கலையில் செல்லக் கூடியவர்களாக ஆகி விடுவீர்கள்.

சுலோகன்: மகிழ்ச்சி என்ற சத்துணவை சாப்பிட்டுக் (அனுபவம் செய்து) கொண்டே இருந்தீர்கள் என்றால், மனம் மற்றும் புத்தி சக்திசாலியாக ஆகி விடும்.

மாதேஷ்வரி அவர்களின் விலை மதிப்பிட முடியாத மகா வாக்கியம் - உலகத்தில் இருக்கும்

அநேகவிதமான வழிகளை விட சிறந்த வழி பரமாத்மாவின் வழியே ஆகும்.

இந்த உலகத்தில் மூன்று விதமான வழிகள் உள்ளன. ஒன்று மனம் கூறும் வழி, இரண்டாவது குருவின் வழி மற்றும் மூன்றாவது சாஸ்திரங்களின் வழி. இப்பொழுது சிந்திக்க வேண்டிய விஷயமாவது - மனவழி, குருவின் வழி அல்லது சாஸ்திரங்களின் வழி ஆகியவை எல்லாமே ஆத்மாக்களின் வழி ஆகியதே அன்றி அவை தேவதைகளின் வழியும் அல்ல. பரமாத்மாவின் வழியும் அல்ல. அப்படியே யாராவது ஒரு தேவதையின் வழி கிடைத்தாலும் கூட அதுவும் மனித ஆத்மாவின் வழி தான் ஆகும். ஆனால் தேவதைகளோ சர்வ குணங்களில் நிறைந்தவர்கள், 16 கலை சம்பூர்ணமானவர்கள் ஆவார்கள். அவர்களுக்கு குருவின் வழி அல்லது சாஸ்திரங்களின் வழியின் அவசியம் கிடையாது. அவர்களுக்கு குருவினுடைய அவசியம் கூட இருக்கவில்லை. சத்கதிக்காகத் தான் குருவிடம் செல்ல வேண்டிய அவசியம் இருக்கும். யார் அதோகதி - வீழ்ச்சியில் இருக் கிறார்களோ, அவர்கள் குருவிடம் போக முடியும். ஆனால் சத்யுக திரேதாவில் அதோகதி என்பதோ இல்லை அல்லவா? எனவே அங்கு குருவிடம் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. உண்மையில் உண்மையான குரு ஒரேயொரு பரமாத்மா ஆவார். அவர் அனைத்து ஆத்மாக் களுக்கும் சத்கதி அளிப்பதற்காக இந்த நாடகத்தின் கடைசியில் வருகிறார். மற்றவர்கள் எல்லோருமே பெயரளவில் மட்டுமே குருக்கள் ஆவார்கள். ஏனெனில் எந்தவொரு மனித ஆத்மா வும் முக்தி மற்றும் ஜீவன் முக்திக்கான வழியைக் கூற முடியாது. தேவதைகள் கூட மனிதனி லிருந்து தேவதைகளாக ஆகி உள்ளார்கள். மற்றபடி அவர்கள் மூன்றாவது கண் உடையவர் களாகவோ அல்லது நான்கு புஜங்கள் உடையவர்களாகவோ இருக்கவில்லை. மக்களோ தேவதைகள் என்பவர்கள் மனிதர்களிலிருந்து வேறுபட்டவர்களாக இருப்பார்கள் என்று நினைக் கிறார்கள். ஆம், வேற்றுமை என்னவென்றால் அவர்கள் 16 கலை சம்பூர்ணமானவர்களாக இருக்கும் காரணத்தால், மிகவும் தூய்மை யானவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய சம்ஸ்காரங்கள் தூய்மையானதாக இருந்தன. மற்றபடி மனிதர்களோ மனிதர்களாகத் தான் இருந்தார்கள். மனிதர்களிடம் தெய்வீக குணங்கள் இருக்கும் பொழுது அவர்களுக்கு தேவதைகள் என்று கூறுகிறார்கள். இப்பொழுது இந்த வழி நமக்கு பரமாத்மா மூலமாக கிடைத்துக் கொண்டி ருக்கிறது. நாம் மனித வழி அல்லது குருவின் வழியில் இல்லை. நாம் பரமாத்மாவின் வழி படி நடந்து கொண்டிருக்கிறோம். பரமாத்மாவின் வழி அவசியம் அனைத்து ஆத்மாக்களின் வழிகளை விட சிறந்த வழியாகத் தான் இருக்கும். நல்லது. ஓம் சாந்தி.